2020 மார்ச் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 94, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

94—

தொழிற்பயிற்சி நிலையம்

***11847—திரு. என்.டி. வெங்கடாச்சலம்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெருந்துறை தொகுதியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 11–10

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பெருந்துறையிலிருந்து 17 கிலோ மீட்டர் தூரத்தில் ஈரோடு அரசு தொழிற்பயிற்சி நிலையம் ஒன்று 635 இருக்கைகளுடன் இயங்கி வருகிறது. மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களால் 2017 ஆம் ஆண்டு ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிப்பாளையத்தில் ஓர் அரசு தொழிற்பயிற்சி நிலையம் துவங்க ஆணையிடப்பட்டு, இந்த தொழிற்பயிற்சி நிலையம் 217 இருக்கைகளுடன் செயல்பட்டு வருகின்றது. இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் 752 இருக்கைகள் நிரப்பப்பட்டு, 100 இருக்கைகள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. மேலும், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50% இடங்களை அரசு ஒதுக்கீட்டின்கீழ் மாவட்ட கலந்தாய்வுமூலம் நிரப்பி, பயிற்சிக் கட்டணத்தை அரசே ஏற்கும் திட்டத்தின்கீழ், பெருந்துறை தொகுதி அமைந்துள்ள ஈரோடு மாவட்டத்தில் இயங்கி வரும் 8 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களிலும் நிரப்பப்படவேண்டிய 288 இருக்கைகளில் 177 இருக்கைகள் நிரப்பப்பட்டு, 111 இருக்கைகள் காலியாக உள்ளன. இவ்விடங்களே இப்பகுதியின் மாணவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் அமைந்துள்ளன. எனவே, புதியதாக ஓர் அரசு தொழிற்பயிற்சி நிலையம் பெருந்துறை தொகுதியில் அமைக்க வேண்டிய தேவை தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.